இதழ் 29 | மலர் 08
ஓகஸ்ற் – ஒக்ரோபர் 2018

**தலைவி**
இல. 191, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 04
+94 11 250 62 72
+94 11 258 51 90
info@viluthu.org
www.viluthu.org

காலாண்டு இதழ்

# தலைவி

## தலைமைத்துவத்தை நோக்கி...

# சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிப்பு

இலங்கையிலும் இம்முறை ஓகஸ்ற் முப்பதாம் திகதி சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம் வட-கிழக்கு உட்பட பல மாவட்டங்களிலும் சிவில் அமைப்புக்களாலும், பாதிக்கப்பட்ட மக்களாலும் தமது உறவுகள் எங்கிருந்தாலும் கூடியவரைவில் அவர்கள் தம்முடன் இணையவேண்டுமென்றும், அவர்களுக்கு என்ன நடந்ததென்பதனை அரசாங்கம் தமக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பதனையும் கேட்டு இந்நாளினைப் பரவலாக அனுஷ்டித்திருந்தனர்.

முல்லைத்தீவில் அமரா ஒன்றியம், மட்டக்களப்பில் பெண்கள் சமாசம், அமரா ஒன்றியம் மற்றும் புத்தளத்தில் மாவட்டப் பெண்கள் சமாசம் மற்றும் அமரா ஒன்றியம் ஆகியன தத்தமது மாவட்டங்களில் நிகழ்வுகளினையும், ஊடக மாநாடுகளினையும் நடாத்தியிருந்தனர். அனைவரதும் எதிர்பார்ப்பு தமது உறவுகளுக்கு என்ன நடந்தது, அவர்கள் எப்போது மீண்டு தம்மிடம் வருவார்கள், அரசு தமக்கு அவர்கள் தொடர்பாக எத்தகைய பதிலினை வழங்கப்போகின்றது என்பதனை மையப்படுத்தியே அமைந்திருந்ததனை அவர்களது நிகழ்வுகளினை மையப்படுத்தி அறிய முடிந்தது. அந்நிகழ்வுகளின்போதான சில பதிவுகள்...

## புத்தளத்தில்...



### காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியினை பெற நடவடிக்கைகள் எடுக்குமாறு கோரிக்கை முன்வைப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நல்லிணக்க பொறிமுறையின் கீழ் நிலைமாறு கால நீதியின் ஊடாக, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு புத்தளம் மாவட்ட அமரா வலையமைப்பு மற்றும் பெண்கள் சமாசம் என்பன அரசிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (30) நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அனுசரணையில் புத்தளம் மாவட்ட அமரா வலையமைப்பு மற்றும் பெண்கள் சமாசம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த விஷேட நிகழ்வுகள் புத்தளத்தில் இடம்பெற்றது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் எங்கள் குரல் எனும் கருப்பொருளில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வடகிழக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது புத்தளத்தில் வாழும் காணாமல் ஆக்கப்பட்டோரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, இடம்பெற்ற ஊடக சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டோரது குடும்பத்தினர் மற்றும் குடும்ப உறவினர்கள் தமக்கு இதுவரை காலமும் இழைக்கப்பட்ட அநீதிகள், ஏமாற்றங்கள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்திற்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டு அதன்மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என இதன்போது கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் குறித்த அமைப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மகஜர் புத்தளம் மாவட்ட செயலாளர் ஊடாக அடுத்த வாரம் அளவில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


காணாமல் போனோருக்கான அலுவலகத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எந்த பயனும் கிடைக்கவில்லை. அத்துடன், இவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க நல்லாட்சி அரசும் கூட தவறியுள்ளது.


எனவே, காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கிறார்களா அல்லது இல்லாமல் போனதற்கான காரணங்களை விரைவில் வெளியிட்டு உண்மைத் தன்மையை நிலைநாட்டுமாறும் கேட்டுக்கொள்கிறோம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக தேடல், அதிகளவான சாட்சிகளை சேகரித்தல், விசாரணைக்கான ஒரு காலத்தை நியமித்தல் மாற்றும் பாதிக்கப்பட்டவரை மையமாக கொண்டு செயற்படல் வேண்டும்.

அத்துடன், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் சேவைகளை நாடுபவர்களுக்கு மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் உரை பெயர்ப்பாளர்களது சேவைகள் ஏற்படுத்திக் கொடுக்கபதுடன், அந்த அலுவலகம் நன்றாக அறியப்பட்ட இடங்களில் மற்றும் இலகுவில் பொதுப் போக்குவரத்து சேவையினூடாக அணுக கூடிய வண்ணம் நிறுவப்பட வேண்டும்.

அத்தோடு, காணாமல் போனவர் பற்றிய சான்றிதழ் வழங்கும் செயல் முறையானது பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்தல் அல்லது சொத்து சம்பந்தமான முடிவெடுத்தல் போன்ற பெண்களது நாளாந்த வாழ்க்கையின் நடவடிக்கைக்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் விரிவுபடுத்த வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் புத்தளம் மாவட்ட செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## மட்டக்களப்பில்...



## முல்லைத்தீவில்...



# அன்புத் தோழியரே!

தலைவி இதழ் ஊடாக மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. தலைவி இதழினைக் கொண்டு வருவதில் முன்னின்று வழிகாட்டிய விழுதின் ஸ்தாபகர் அமரர் சாந்தி சச்சிதானந்தம் அவர்கள் மறைந்து மூன்று வருடங்களாகி விட்டன. ஆனாலும் அவரினால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் விழுது என்ற கருவியின் துணைக்கொண்டு இன மத மொழி வேறுபாடின்றிச் சமூக மக்களிடம் கொண்டு சேர்க்கப்படுவது விழுதில் பணியாற்றும் நம் அனைவருக்கும் பெருமையே.

காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் வட–கிழக்கில் மக்களுடனான சந்திப்புக்களினை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நடாத்தியிருந்தன. அதில் நம் அமரா போர அங்கத்தவர்களும், மாவட்டப் பெண்கள் சமாச அங்கத்தவர்களும், விழுதின் தன்னார்வத் தொண்டர்களும் தங்களது தேவைப்பாடுகளையும், சிபாரிசுகளையும் குழுவினருக்குச் சமர்ப்பித்திருந்தனர். விரக்தியின் விளிம்பிலிருந்த பலர் இந்த அலுவலகத்தினை நாம் ஏற்கப்போவதில்லையென நிகழ்வின்போது போது சம்பந்தப்பட்ட தரப்பினருக்குக் கூறி அமர்வில் பங்கேற்காது புறக்கணித்திருந்தனர். மக்களுடனான சந்திப்பின்போது பெறப்பட்ட விடயங்கள் இடைக்கால அறிக்கையாகத் தொகுத்து அண்மையில் ஜனாதிபதி அவர்களிடம் காணாமல்போனோருக்கான அலுவலகத்தின் தவிசாளர் சாலிய பீரிஸ் மற்றும் அவரது குழுவினர் சமர்ப்பித்திருந்தனர். அதில் நம் பெண்களால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசாங்கம் எவ்வாறான அமுற்படுத்தல்களினை இடைக்கால அறிக்கையினை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளவிருக்கின்றதென்பதனை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டியுள்ளது.

கடந்த மாதம் ஓகஸ்ற் முப்பதாம் திகதி சர்வதேச காணாமலாக்கப்பட்டோருக்கான தினம் மாவட்டங்கள்தோறும் அனுஷ்டிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களின் குரல்களும் நிகழ்வுகளில் உள்வாங்கப்பட்டிருந்தன. தொடர்ந்தும் பல ஆண்டுகளாகத் தங்கள் உறவுகள் எங்குள்ளனர், உயிருடன் இருக்கின்றார்களா இல்லையாவெனத் தடுமாறிக் கொண்டிருக்கும் உறவுகள் தங்களது எதிர்ப்பினைச் சாத்வீகமான போராட்டங்களினால் வெளிக்காட்டியுள்ளனர். அரசு இத்தகைய பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான தனது ஆதரவினை அவர்களது விபரங்களினைப் பகிரங்கமாக வெளியிடுவதன் மூலமாக மட்டுமே நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வர உதவிய பாதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையினை வழங்கமுடியும்.

யுத்தகாலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமீறல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிலைமாறுகால நீதியினை வழங்குவதில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிக மந்தமானநிலையிலேயே சென்று கொண்டிருக்கின்றன. அதன் ஓர் ஆதாரமாக இம்மாதம் இடம்பெற்ற ஐ.நாவின் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பேசிய விடயங்கள் மக்களுக்கான நீதி கிடைக்குமென்ற எதிர்பார்ப்பினைத் தகர்த்தெறிந்துள்ளது. சர்வதேசத்தின் தலையீடின்றி நீதி கிடைக்காது என்று நம்பிக் கொண்டிருந்த மக்களுக்கு 'எமது பிரச்சினைகளை நாமே பார்த்துக் கொள்வோம். சர்வதேச தலையீடுகள் அவசியமற்றவை' என்ற அவரது உரை நீதியினை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் பலத்த ஏமாற்றத்தினை அளித்துள்ளது. இதற்கு அடுத்தகட்டமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வாறான நகர்வுகளினை மேற்கொள்ளப் போகின்றார்கள் என்பதே இங்கு முக்கியமாகும். பாதிக்கப்பட்ட தரப்பினர் இணைந்து செயற்படல் என்பது பலமான விடயமாக மீண்டும் அமையும். எங்களது மாவட்டப் பெண்கள் சமாசங்கள் எவ்வாறு இவ்விடயத்தினைக் கையாளப் போகின்றனவென்பதனை அடுத்த இதழில் அவர்களது நேர்காணல்கள் மூலம் அறிவோம்.

பெண் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பல ஆய்வுகள் கொழும்பினை மையப்படுத்திய நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் வரைவிலக்கணம் கூட எமது வடக்கு கிழக்குப் பெண் மாற்றுத்திறனாளிகளினை மையப்படுத்தி வரையறுக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பல விவாதங்கள் தொடர்கின்றன. பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தினரால் நடாத்தப்படுகின்ற கொள்கைகள் பற்றிய தொடர் சந்திப்பின்போது எங்கள் பெண்களும் பாராளுமன்றம் வந்து தங்கள் கருத்துக்களை நேரடியாகத் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர்.

விழுதின் இன்னோர் மைல்கல்லாக அண்மையில் இளையோருக்கான தேசிய மாநாடொன்றினை 'நல்லிணக்கச் செயன்முறையில் இளையோரை வலுப்படுத்தல்' என்ற தொனிப்பொருளின்கீழ் நடாத்தியிருந்தது. பெண்களது செயற்திட்டங்கள் மட்டுமன்றி இளையோரின் செயற்றிட்டங்களும் தேசியரீதியாக எம்மால் அமுற்படுத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை இம்மாநாட்டின்போது விழுதின் பதினைந்து வருடகால செயற்பாடுகளில் பெண்களைத் தீர்மானமெடுக்கும் துறைகளில் பங்கேற்க வைப்பதற்காய் விழுது வழங்கிய பங்களிப்புப் பற்றிய பதிவினை உள்ளடக்கிய 'செங்கோலோச்ச விழைந்த பெண்களின் குரல்கள்' என்ற நூலும் வெளியிடப்பட்டது. இவை பற்றிய மேலதிக விடயங்களினையும் நீங்கள் இந்த இதழில் பார்க்கலாம். மீண்டும் அடுத்த தலைவியில் சந்திக்கும் வரை...

**– அன்புடன் இந்து**

## முல்லைத்தீவில்

# அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியத்தின் செயற்பாடுகள்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கல்வித்துறை மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து தன் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு வழிகாட்டல், தேவைக்கேற்ப பயிற்சிகளை வழங்கல், பெண் தலைமை தாங்கும் குடும்பங்களினை அணிதிரட்டி, அவர்களுக்கான பயிற்சிகள், உணவுப்பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் திட்டமுயற்சிகளை நிதிவழங்குனர்களின் ஆதரவுடன் முன்னெடுத்தல், அவர்களது பிள்ளைகளின் கல்வி முயற்சிகளுக்கு வழிகாட்டி உதவல், புதிய கூட்டுத்தொழில் முயற்சிகளுக்கு வழிகாட்டல், அவர்களுடன் தொடர்பான சேவைகளை சேவை வழங்குனர்களிடமிருந்து பெற வழிகாட்டல் மற்றும் அவர்கள் சார்ந்த பிரச்சினைகளுக்கான தேசியரீதியான பரிந்துரை நடவடிக்கைகளில் ஈடுபடல் என இன்னோரன்ன செயற்பாடுகளை அமுற்படுத்தி வருகின்றது. மாவட்ட ரீதியில் மாதர்கிராம அபிவிருத்திச்சங்க சமாசங்களைப் பலப்படுத்தல், அவர்களுக்கான அனுபவப்பகிர்வுகளை உள்ளூர் மற்றும் பிராந்தியரீதியில் ஏற்பாடு செய்தல், வலையமைப்புக்களுடன் இணைந்து செயற்பட ஊக்குவித்தல் என்றவகையிலும்விழுதின்செயற்பாடுகள் அமைகின்றன. இறுதிப் போரின் போது மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகஅடையாளப்படுத்தப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திலும் விழுதின் பணிகள் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டன.

மாவட்ட செயலரின் வழிகாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது பணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமங்களிலும், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் கிராமங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன. யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் அங்குள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுடன் 2015 இலே விழுது கிராமங்கள் தோறும் போஷாக்குநிலைமையினை உயர்த்தவதற்காக அன்னையர் ஆதரவுக் குழுக்களின் உதவியுடன் செயற்பாடுகளினை ஆரம்பித்தது. தொடர்ந்து இக்குழுக்களின் செயற்பாடுகள் யாப்பின்பிரகாரம் வரையறைக்குட்பட்டு இருந்தமையினால் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வழிகாட்டலுடன் சமூக ஆதரவுக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கான பயிற்சிகள்அனைத்துப்பரப்புக்களிலும்வழங்கப்பட்டு, அவர்கள் கிராமங்களில் இலகுபடுத்துனர்களாகவும், பயிற்சியாளர்களாகவும் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களது செயற்பாடுகள் கிராமங்களில்முன்னிலைப்படுத்தப்பட்டன. இவர்களுக்கான முழுமையான ஒத்துழைப்பினை மருத்துவமாதுக்கள் வழங்கினர்.

விழுதின் பணிகள் தொடர்ந்து மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்டன. அத்துடன் கிராமங்கள்தோறும்அமராகுடும்பத்தலைமை தாங்கும்பெண்களின்போரங்கள்மாதர் சங்கத்திற்குள் உள்ள பெண் தலைமை தாங்கும் குடும்பத்தினருக்காய் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து அவர்களின் வல்லமையினைக் கட்டியெழுப்பும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதனை விழுதின் அலுவலர்களான சஜீவன், பகீரதன் மற்றும் சிவதீபன் ஆகியோர் ஒன்றிணைந்து வழங்கியிருந்தனர். தற்போது 1700 அமரா அங்கத்தவர்களைக் கொண்டு 14 அமரா போரங்கள் மிக்க வினைத்திறனுடன் இயங்கி வருகின்றன. இந்த மாவட்ட அமரா ஒன்றியம் தங்களது அங்கத்தவர்களின் உரிமைகள், வாழ்வாதாரம், போசாக்கு, கல்வி, சுகாதாரம் மற்றும் நிலைமாறு காலநீதிக்காய் போராடி வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கைவேலி, விசுவமடு, இளங்கோபுரம், வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், தேராவில், உடையார்கட்டு, இரணைப்பாலை, தேவிபுரம், வள்ளிபுனம் மற்றும் மந்துவில் போன்ற 13 கிராமங்களைச் சேர்ந்த 250 பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளையும் இதர கற்றல் உபகரணங்களையும் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் மூலம் பெற்றுக் கொடுத்துள்ளனர். புலம்பெயர்ந்து வாழும் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் மூலம் 30 அமரா போர அங்கத்தவர்களுக்கான கோழிவளர்ப்பு, உணவு தயாரித்தல், மாடுவளர்ப்பு இதரவாழ்வாதாரச்செயற்பாடுகளுக்கென உதவிகளை பெற்றுக் கொடுத்துள்ளனர். புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் நிலவும் குடிநீர்ப்பிரச்சினையினைக் கருத்திற் கொண்டு, உடையார்கட்டு மற்றும் வள்ளிபுனம் பகுதிகளில் வாழும் விவசாயத்தினை வாழ்வாதாரமாக கொண்ட பெண்களின் நலன் கருதி புலம்பெயர்ந்த மக்களின் நிதியுதவியுடன் நான்கு தோட்டக்கிணறுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளனர்.






தங்களது கோரிக்கைகள் மற்றும் சிபாரிசுகளடங்கிய தேசிய விதவைகள் பட்டயத்தினை கௌரவ முன்னாள் நீதியரசரும் வடமாகாண முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் அவர்களிடமும், வன்னி மாவட்டப் பெண் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாந்தி சிறீஸ்கந்தராஜா மற்றும் வடமாகாண மகளிர் அமைச்சர் அனந்தி சசிதரன் அவர்களிடமும் சமர்ப்பித்துத், தங்களது பிரச்சினைகளினைத் தீர்ப்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொண்டனர். சர்வதேச மகளிர் தினம், சர்வதேச விதவைகள் தினம், சர்வதேச உண்மைக்கும் உரிமைக்குமான தினம், சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம் என பலதரப்பட்ட சர்வதேச தினங்களினை அனுஷ்டித்து மக்களின் பிரச்சினைகளினை அனைத்து சமூகத்தினரின் முன்பும் கொணர்ந்து கவனயீர்ப்பினைமேற் கொள்கின்றனர்.

நிலைமாறுகாலநீதிக்காய்போராடும் பெண் தலைமை தாங்கும் குடும்பத்தினர் முல்லைத்தீவு மாவட்டத்திலே ‘எங்களின் குரல்கள்’ என்ற பிரசாரத்தினை முன்னெடுத்து அனைத்து அரச அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் இதர உரித்துடையோரினைச் சந்தித்தும், மக்களுடனான சந்திப்புக்களினை எற்பாடு செய்தும் தங்களது வேண்டுகோள்கள், தேவைகளினைத் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர். முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி. றூபா கேதீஸ்வரன் அவர்களை ‘எங்களின் குரல்கள்’ பிரசாரத்தின்கீழ் பிரதம அதிதியாக அழைத்து, அழைத்து தமது மக்களின் குடிநீர்ப் பிரச்சினைகள், காணிப்பிரச்சினைகள், வாழ்வாதாரப் பிரச்சினைகள், மொழிப்பிரச்சினைகள், நுண்நிதிக்கடன் பிரச்சினைகள், சமூகஅடிக்கட்டு மானப் பிரச்சினைகள், காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் படும் துன்பங்கள் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகளினை முன்வைத்து, தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளினைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். அதேபோன்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அலுவலர்களான சமூக சேவைகள் உத்தியோத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோத்தர் மற்றும் ஏனைய அலுவலர்களையும் அழைத்துத் தமது பிரதேசத்திலுள்ள பிரச்சினைகளினை நேரடியாக அவர்கள் முன்வைத்து, அவற்றினைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களையும் பெற்றுள்ளனர்.




சமுர்த்திப் பிரச்சினைகளுக்கான போராட்டங்களில் பங்குபற்றித் தமது ஆதங்கங்களினைப் பகிர்ந்து கொண்டுள்ளதுடன் தமது மக்களின் பிரச்சினைகளினை நேரடியாக ஜனாதிபதிக்கு தெரிவிக்கும் பொருட்டு, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதியினையும் அனுப்பி வைத்தமையினையும் கருத்திற்கொள்ள வேண்டும். கேப்பாப்பிலவு காணி விடுவிப்புப் போராட்டத்தில் இவர்களும் இணைந்துகொண்டு அவர்களுக்கான ஆதரவினை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இன்று நாற்பது குடும்பங்கள் தங்களது சொந்தக் காணிகளை மீளவும் பெற்றுள்ளனர். காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாகப் பல வேண்டுகோள்களினை அரசியல்வாதிகளுக்கும் இதர ஆணைக்குழுக்களுக்கும் முன்வைத்துள்ளனர். அதுமட்டுமல்லாது ஒரு வருடங்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டங்களினை நடாத்திவந்த காணாமற்போனோரின் குடும்பங்களின் அங்கத்தவர்கள் முன்னெடுத்த போராட்டத்திற்கும்தமது ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் வழங்கியிருந்தனர்.

முப்பது வருடகாலத்திற்கும் மேலாகப் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கான உப அஞ்சல் அலுவலகமின்றி மக்கள் இன்னற்பட்டு வருகின்றார்கள். அதனைப் பிரதேச செயலரின் கவனத்திற்குக் கொண்டுவந்து தற்போது அதனை அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் முல்லைத்தீவிலிருந்து போட்டியிட்ட 11 பெண்களில் அமரா அங்கத்தவர்களும் போட்டியிட்டனர் என்பதும் பாராட்டப்படக்கூடிய விடயமாகவும், பெருமைக்குரிய விடயமாகவும் அமைந்துள்ளது.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து அமரா போர அங்கத்தவர்கள் செல்வராணி, திலகவதி மற்றும் தயாளினி ஆகியோர் பாராளுமன்றத்தின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுவின் பெண்கள் மற்றும் பால்நிலை பிரிவின் கூட்டத்திற்குச் சமுகமளித்துத் தங்களது பிரச்சினைகள் பற்றிக் குழுக்களுக்குத் தெரியப்படுத்தினர். தேசவழமைச்சட்டம் பெண்தலைமை தாங்கும் குடும்பங்களின் சொத்துரிமை சம்பந்தமாக ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் எல்.டீ.ஓ. சம்பந்தமான பிரச்சினைகளையும் கலந்துரையாடி தங்களது சிபாரிசுகளினையும் முன்வைத்திருந்தனர். அரசாங்கம் தமக்கான விசேட சலுகைகளினைப் பாதிக்கப்பட்ட மக்களென்ற ரீதியில் வழங்க வழங்கவேண்டுமெனவும், போரினாற் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும்பிரச்சினைகள்தொடர்பாகவும், அரசு கவனத்திற்குட்படுத்த வேண்டிய விசேட விடயங்கள் தொடர்பாகவும் அவர்களால் குழுவினருக்கு முன்வைக்கப்பட்டன. தொடரும்கலந்துரையாடல்களில் ஏனையோரும் பங்குபற்றித் தமது பங்கேற்பினை உறுதிப்படுத்துவதற்கான எற்பாடுகளினை விழுது நிறுவனம் பெண்கள் பாராளுமன்ற ஒன்றியத்துடனான தொடர்புகள் மூலம் ஏற்படுத்தி வருகின்றது. இவர்களது செயற்பாடுகள் கொள்கைவகுப்பாளர்கள் முதல் சர்வதேசப் பிரதிநிதிகள் வரை சென்றடைவது இவர்களது வினைத்திறனான ஆளுமையினைப்பறைசாற்றுவதாய்அமைந்துள்ளது. ஜெனீவாவிலிருந்து வருகை தந்த ESCR குழுவின் தவிசாளரையும் சந்தித்துவடகிழக்கில்பெண்கள்சமூக, பொருளாதார மற்றும் அரசியற் தளங்களில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி அமரா அங்கத்தவர்களிற் சிலர் பகிர்ந்து கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அனைத்துத் தரப்பினரையும் அணுகித் தங்களது பிரச்சினைகள் மற்றும் நீதிக்காய் குரல் கொடுக்கும்இவர்களதுசெயற்பாடுகள் மென்மேலும் சமூகத்திற்குப் பயனுள்ளதாய் அமைய வாழ்த்துகின்றோம்.

# நல்லிணக்கத்தின் அடையாளமாய்

# கரடிப்புவல் மாதர் சங்கம்









✽ ஆர்.சுகுணாதேவி, எஸ்.பி. டினூசா
புத்தளம்

நல்லிணக்கம் தொடர்பாகப் பல செய்திகளினை நாம் போருக்குப் பின்னரும், போரின்போதும் கேள்விப்பட்ட துண்டு. பல பயிற்சிகளினை நடாத்தியதுமுண்டு, பங்குபற்றியதுமுண்டு. அதுவும் நல்லாட்சியின் பின்னர்தான் அதற்கானதோர் அமைச்சு, அமைச்சரென அதிகம் அறிகின்றோம். ஆனால் தமது நாளாந்த செயற்பாடுகளின் மூலம் சாதாரணமாகவே நல்லிணக்கத்தினைத் தமது கிராமத்தில் ஏற்படுத்திய ஓர் சங்கத்தினைப் பற்றி அண்மையில்தான் எமது புத்தளம் மாவட்ட அலுவலர்கள் சுகுணா மற்றும் டினூஷா உடன் மேற்கொண்ட களவிஜயத்தின் மூலம் நேரடியாகத் தெரிந்துகொள்ளும் ஒரு வாய்ப்புக் கிட்டடியது.

புத்தளம் மவட்டத்தின் வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒரு சிறிய கிராமமே கரடிப்புவல் கிராமமாகும். இக்கிராமம் புத்தளத்தில் இருந்து சுமார் முப்பது கிலோமீற்றருக்கு அப்பால் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் தமிழ் மற்றும் சிங்கள் இனங்களைச் சேர்ந்த சுமார் நாற்பத்தைந்து குடும்பங்கள் பல வருடங்களாக வாழ்ந்து வருகின்றன. இங்கு வாழும் மக்களுக்கான உரிய குடிநீர் வசதிகளோ, சுகாதார வசதிகளோ கிடையாது. பயணம் செய்வதற்கான ஒழுங்கான போக்குவரத்து வசதிகளும் இல்லை. வறுமையுடன் வாழும் இம்மக்கள் தமது தேவைகள் குறித்துப் பலதடவைகள் உரிய சேவை வழங்குனர்களிடம் கூறியும் இதுவரை பலன்களேதுமில்லை. சிறியதோர் ஒற்றையடிப் பாதை மூலமே மக்கள் வண்ணாத்திவில்லு பிரதான வீதிக்கு ஆறு கிலோமீற்றர் வரை நடந்து காட்டுப் பாதையினால் பயணிக்க வேண்டும். ஒரேயொரு சில்லறைக் கடையை மட்டுமே கொண்டுள்ள இக்கிராமத்தில் பொருட்கள் வாங்கவேண்டுமெனில் நாளாந்தம் பிரதான வீதிக்கே வரவேண்டும். அதுவும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களும் அதிகம். பாடசாலை செல்ல வேண்டுமாயின் வண்ணாத்திவில்லுவிற்கே இவ்வாறு அச்சத்துடன் நாளாந்தம் பயணித்துக் கற்றலினை மேற்கொள்ள வேண்டும். இந்த நிலைமையில் பல சிறார்கள் பாடசாலைக்கல்வியினை இடையில் நிறுத்தி விடுவது இங்கு சாதாரண விடயமாகக் காணப்படுவதுடன் இது அக்கிராமத்தின் கல்விநிலையில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் விடயமாகவுமுள்ளது.


இச்சந்தர்ப்பத்தில் விழுது நிறுவனத்தின் தொடர்பினைப் பிரதேச செயலகம் ஊடாகப் பெற்ற இம்மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தமது சங்கத்தினையும் விழுதின் செயற்றிட்டக் கிராமமாக உள்வாங்குமாறு கேட்டுக் கொண்டனர். அதன்பிரகாரம் ஒரு சங்கம் சிறப்பாகச் செயற்படுவதற்கான வழிகாட்டல்களினை விழுது அவர்களுக்கு வழங்கியது. மாதாந்தக் கலந்துரையாடல்களினை ஒழுங்காக நடாத்த நெறிப்படுத்தியது. வாசகர் வட்டங்களை உருவாக்கி அதனைக் கிரமப்படுத்த வழிகாட்டியது. திணைக்களங்கள், பிரதேச சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களின் சேவைகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது, யாரை அணுகுவது போன்ற விடயங்களினை எமது அலுவலர்கள் கலந்துரையாடல்களின்போது சொல்லிக் கொடுத்தனர்.

இறுதியாக அவர்களுக்குத் தமது பிரச்சினைகளுக்கான பரிந்துரைச் செயற்பாடுகளினை எவ்வாறு மேற்கொள்வது பற்றியதோர் பயிற்சியினை விழுதின் அலுவலர் சுகுணா அவர்கள் நடாத்தியிருந்தார்கள். இப்பயிற்சி அவர்களது கிராமத்திலுள்ள பிரச்சினைகளினை இன்னும் சற்று ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவியது. அவர்கள் தமது அதிகாரிகளை நாடி தீர்வுகளைப் பெறவும் வழிகாட்டியது.

இவ்வாறு பல செயற்பாடுகளினை மேற்கொண்டு வந்த விழுது நிறுவனத்திற்கு ஒரு பிரச்சினையினை மாதாந்தக் கூட்டத்தின்போது முன்கொண்டு வந்தனர். அக்கிராமத்தில் இரு வழிபாட்டுஸ்தலங்கள் காணப்படுவதாகவும், அதில் இந்துக் கோயிலில் விளக்கேற்றுவதற்கு விகாரையிலுள்ள புத்தபிக்கு இடமளிக்காது இனத்துவேசத்தினைத் தூண்டும், வகையில் ஒற்றுமையுடன் வாழும் சிங்கள மக்களைத் திசைதிருப்ப முயல்கின்றாரென்ற குற்றச்சாட்டும் பெண்களால் முன்வைக்கப்பட்டது. பௌத்த விகாரைக்குரிய நிலத்தினை ஊரிலுள்ள சிலரின் ஒத்துழைப்புடன் தனது பெயருக்கு மாற்ற முற்படுவதாகப் பெண்கள் கேள்விப்பட்டாகவும் கூறினர். தமிழ் மக்களுக்கெதிரான அவதூறான பேச்சுக்களையும், வெறுப்பு பேச்சுக்களையும் பேசுவதுடன், இந்துக்கோயில் அமைந்துள்ள இடம் விகாரைக்குச் சொந்தமானதெனக் கூறி, கோயிலில் விளக்கேற்றுவதற்கும் தடை விதித்துள்ளதாகக் கூறியதனால் மேலதிக விபரங்கள் மக்களிடமிருந்து பெறப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் இதனை உரியதரப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவந்தது விழுது. இதன் விளைவால் பிரதேச செயலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அலுவலர் போன்ற அனைத்து அலவலர்களும் மக்களுடனான சந்திப்பொன்றினை உடனடியாக நடாத்தி, இந்துக்கோயிலில் வழிபாட்டினை நடாத்துவதற்கு உடனடியாக உரிய வசதிகள் செய்து கொடுத்தனர். மக்கள் வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் நிகழா வண்ணம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு மக்கள் தற்போது கிரமமான தமது சமய வழிபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இனங்களுக்கிடையே பாரபட்சங்களினை ஏற்படுத்தும்வகையில் செயற்பட்ட விகாராதிபதியினை அவ்வூரிலிருந்தே மக்கள் விரட்டியடித்து விட்டனர். சிறந்ததொரு புதிய விகாராதிபதி தற்போது இணைந்துள்ள நிலையில், மாதர் சங்கத்தினரின் செயற்பாடுகள் பலராலும் பாராட்டப்பட்டதனைத் தொடர்ந்து தற்போது அதிகளவிலான சகோதர இனப் பெண்கள் சங்கத்தில் இணைந்து கொண்டுமுள்ளனர். இரு மதத்தவர்களும் தமது கலாசார நிகழ்வுகளில் பரஸ்பரம் பங்குபற்றி வருகின்றனர். விகாரை மற்றும் இந்து ஆலயத்திலும் அடிக்கடி அனைவரும் இணைந்து சிரமதானப் பணிகளிலும், சமய வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சமூகத்தில் நல்லிணக்கம் நிலவி வருகின்றது. இதுவரை காலமும் பிக்குவின் பாவனைக்கென இருந்த விகாரையின் ஒரு பகுதி மக்கள் பாவனைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்புதிய விகாராதிபதியின் பங்களிப்புடன் தற்போது விகாரையின் வளாகத்தில் இரு இனங்களையும் சார்ந்த பாலர் பாடசாலை இயங்குவதுடன் மாணவர்களுக்கான அறநெறிப் பாடசாலையும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடாத்தப்பட்டும் வருகின்றது. தமது ஊரின் பெயரில் கூட தங்களது ஒற்றுமையினைப் புலப்படுத்தும் இம்மக்கள் ஏனைய மக்களுக்கு நல்லதோர் அடையாளமாகத் திகழ்கின்றனர் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. எங்களது அலுவலருக்கும் பாராட்டுக்கள்.

## பெண்களுக்கான தேர்தல் நிதியம்



விழுது நிறுவனமானது சமூகமட்ட அமைப்புக்கள் தமது பிரதேசத்தில் போட்டியிட விரும்பும் பெண்களுக்காகத் தேர்தல் நிதியமொன்றினை (Election fund) ஆரம்பித்துள்ளது. இவர்களுக்காக உதவும் முகமாக அதற்கான வங்கிக் கணக்கொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கு உதவும் சமூகமட்ட அங்கத்தவர்கள், வாசகர் வட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பங்களிப்பினை வெளியிடப்படும் தலைவி இதழ்களில் வெளியிட்டு வருகின்றோம். குறித்த பகுதியிலிருந்து கிடைத்ததொகை அப்பிரதேசத்தில் போட்டியிடும் பெண்களுக்கே பகிர்ந்தளிக்கப்படும்.

இதற்கான ஆவணங்கள் அனைத்தும் வைப்பிலிடுபவர்களிடமும், அதன் பிரதி தலைமைக் காரியாலயத்திலும் பாதுகாக்கப்பட்டு வரு கின்றன. குறிப்பிட்ட தொகையினை எட்டும்பட்சத்தில் இத்தொகை யினை நாம் மாவட்டங்களிலுள்ள சமாசங்களிடம் ஒப்படைத்து விடுவோம். அவர்களே தொடர்ந்து இதனைச் செயற்படுத்தி வருவர்.

அவர்களினால் எமக்கு அனுப்பப்படும் விபரங்கள் தவறாது தலைவியில் வெளியிடப்படும். எனவே, நீதிக்காகப் போராடும் பெண்களுக்கு அரசியலில் இடம் கிடைக்கவேண்டுமென விரும்பும் உள்ளங்களும், சமூகமட்ட அமைப்புக்களும் மற்றும் பிற நிறுவனங்களும் இன்றே உங்கள் பங்களிப்பினை நல்க முன்வாருங்கள்.

நீங்களும் பங்களிப்புச் செய்யலாம். உங்கள் தொகையினை பின்வரும் வங்கிக்கணக்கில் வைப்பிலிடலாம்.


**கணக்கு இலக்கம்: 1100022753**
வெள்ளவத்தை கிளை, கொமர்ஷல் வங்கி

# தேசிய இளையோர் மாநாடு - 2018

## நல்லிணக்கச் செயன்முறையில் இளையோரை வலுப்படுத்தல்

### விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்














*விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி, 'நல்லிணக்கச் செயன்முறையில் இளையோரை வலுப்படுத்தல்' என்ற தொனிப் பொருளின்கீழ் தேசிய இளையோர் மாநாடொன்று அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கௌரவ முன்னால் நீதியரசரும், வடமாகாணத்தின் முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பு அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அவர்கள் கலந்துகொண்டு மாநாட்டினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள். விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரியான இந்துமதி ஹரிகரதாமோதரன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் விழுதின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மைத்ரேயி இராஜசிங்கம் அவர்கள் கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்கள்.*

*நிகழ்வின்போது ஆரம்ப நிகழ்வாக 'சமுதாய சங்கிலி' தன்னார்வத் தொண்டரான மதிசங்கர் அவர்களினால் 'துணிவுள்ள வீரர்கள் அணிசேர வருக' என்ற சுத்தானந்த பாரதியின் பாடல்வரிகள் இசைக்கப்பட்டன. வரவேற்புரையினை விழுதின் தன்னார்வத் தொண்டர் குழுக்களிலொன்றான 'Active Citizens' குழுவின் அங்கத்தவரான கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் ரம்மியன் சந்தனகுறூஸ் அவர்கள் வழங்கியிருந்தார்கள். தொடர்ந்து, தலைமையுரையில் விழுதின் கடந்த காலப் பதிவுகள், வெற்றிகள், சவால்கள் பகிரப்பட்டு விழுதின் எதிர்கால நோக்கு பற்றியும் பேசப்பட்டதுடன் அனைவரது ஒத்துழைப்புக்கும் விழுதுக்குடும்பம் சார்பாக நன்றி பகரப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத்தின் 'சமுதாய சங்கிலி' தன்னார்வத் தொண்டர்களில் ஒருவரான நிரோஜனின் செயற்பாட்டளிக்கையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 'கிழக்கின் அகல்' தொண்டரான ஜெயதர்சனின் செயற்பாட்டு அளிக்கையும் வழங்கப்பட்டன. அத்துடன் 'சமுதாய சங்கிலி' தொண்டர்களினால் நல்லிணக்கம் தொடர்பான இளைஞர்களின் மனப்பாங்கினை வெளிப்படுத்திய 'இளைஞர்கள் நாம் புதுயுகம் படைப்போம்' என்ற நாடக ஆற்றுகை இடம்பெற்றது. காலத்தின் தேவையுணர்ந்து படைக்கப்பட்ட பலரையும் சிந்திக்க வைத்த ஆற்றுகையாக அது அமைந்திருந்து, பார்வையாளர்களால் பாராட்டப்பட்டது.*

*தொடர்ந்து சிறப்பு அதிதியின் உரை வழங்கப்பட்டது. அதில் அவர் விழுதின் கடந்தகாலச் செயற்பாடுகளில் மாறுபட்டதாக இளைஞர்களுடனான பணிகள் அமைந்துள்ளனவென்றும், எமது மாவட்டத்தில் இளைஞர்களுடன் பணியாற்றும் நிறுவனங்களுள் சற்று வித்தியாசமான அணுகுமுறைகளினையொட்டி, நல்லிணக்கத்தினை நோக்கிய செயற்பாடுகள் அமைந்துள்ளதனை இளைஞர்கள் குழுக்களின் அளிக்கையின் மூலம் அறியமுடிந்தது. இதன் பணிகள் மென்மேலும் வளர வாழ்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.*

*விழுதினால் நடாத்தப்பட்ட அரசியற் கற்கைநெறியான 'இளையோரை அரசியல், ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தில் வலுப்படுத்தல்' கற்கைநெறியினை மேற்கொண்டு பூர்த்தி செய்த மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் அமர்வும் இடம்பெற்றது. இதனை நெறிப்படுத்தினார் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், சமூகவியற் பேராசிரியருமான திரு. என். சண்முகலிங்கம் அவர்கள். அரசியற் கற்கைநெறியினைப் பூர்த்தி செய்த பமீஸ், வேல்ராஜ், அமலப்பிரியாதுரம், கோகுலரூபினி மற்றும் குகதாசன் ஆகியோர் தங்களது ஆய்வுகளினைச் சமர்ப்பித்திருந்தனர்.*

1. வலிகாமம் மேற்குப் பிரதேச சபைப் பிரிவில் அரசியற் பங்கேற்பில் பெண்கள் எதிர்கொண்ட சவால்கள்: **திரு. அருளானந்தராஜா குகதாசன்**
2. கிராமியப் பெண்களின் வாழ்வாதாரத்தில் சமூகமட்ட அமைப்படுக்களின் வகிபாகம்: **செல்வி அமலப்பிரியாதுரம் ஞானப்பிரகாசம்**
3. முசலியில் மீள்குடியேறிய முஸ்லீம் மக்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள்: **திரு. முகமட் பௌஸ்டீன் பமீஸ்**
4. போருக்குப் பின்னர் திருகோணமலை இராஜவரோதயம் பிரதேசத்தில் நுண்நிதிக் கடன் பெற்ற பயனாளிகளும், வழங்குனர்களும் எதிர்கொள்ளும் சவால்கள்: **திருமதி கோகுலரூபினி சஜீபன்**
5. சாவகச்சேரி உதயசூரியன் கிராமத்தில் வாழும் நகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் குடும்பங்களின் உள சமூகப் பொருளாதார சவால்கள்: **திரு. கந்தசாமி வேல்ராஜ்**

*தொடர்ந்து விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் கடந்த பதினைந்து வருட காலமாகப் பெண்கள் தீர்மானமெடுக்கும் துறைகளில் பங்கேற்பதற்காய் வழிகாட்டிய விழுதின் பதிவு தொடர்பாக ஹ. இந்துமதியினால் எழுதப்பெற்ற 'செங்கோலோச்ச விழைந்த பெண்களின் குரல்கள்' என்ற நூல் பிரதம அதிதி மற்றும் சிறப்பு அதிதிகளிடம் நிறைவேற்றுப் பணிப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் அந்நூலினை விழுதின் மாவட்டப் பிரதிநிதிகளும் பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து பிரதம அதிதியின் உரை இடம்பெற்றது. அது வருமாறு;*

**நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர், வடமாகாணம்**

குருப் ப்ரம்மா!

இன்றைய நிகழ்வைத் தலைமையேற்று நடாத்திக்கொண்டிருக்கின்ற திருமதி இந்துமதி ஹரிகரதாமோதரன் அவர்களே, இந்த நிகழ்வைச் சிறப்பிப்பதற்காக வருகை தந்திருக்கும் சிறப்பு அதிதி யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அவர்களே, கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டிருக்கும் விழுது அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி மைத்ரேயி இராஜசிங்கம் அவர்களே, ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தல் நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருக்கும் முன்னை நாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்களே மற்றும் இந்த நிகழ்வுகளில் தமது ஆய்வுக் கட்டுரைகளையும் கலை நிகழ்வுகளையும் அரங்கேற்றுவதற்காக வருகை தந்திருக்கின்ற துறைசார் விற்பன்னர்களே, விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் அங்கத்தவர்களே, சகோதர சகோதரிகளே, குழந்தைகளே!

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் வருடாவருடம் முன்னெடுக்கின்ற பல்வேறு நிகழ்வுகளில் நான் தவறாது கலந்து கொண்டு உரையாற்றி வருகின்றேன். இந்த வருடமும் மிகச்சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்ற இந்த இளையோர் தேசிய மாநாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு உங்கள் முன் உரையாற்றுவதில் பெருமகிழ்வடைகின்றேன். வடமாகாண சபையின் முதலாம் அத்தியாயம் முடிவுறும் காலத்திலும் என்னை அழைத்தமைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

காலத்தின் தேவையறிந்து இந்த இளையோர் தேசிய மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் இளைஞர் யுவதிகளுக்கிடையே ஒரு மிகப்பெரிய விழிப்புணர்வை உண்டுபண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எமது இளைஞர் யுவதிகளின் வாழ்க்கை சில தீய சக்திகளின் ஊடுருவலால்
















சீரழிந்து வருகின்றமை கண்கூடு. இதனால் இந்த நாட்டில் குறிப்பாக வடபகுதியில் ஒரு குழப்பநிலை உருவாகியுள்ளது. அந்தக் குழப்ப நிலையை நாம் மாற்ற வேண்டும். எமது இளைஞர் யுவதிகள் எதிர்காலத்தில் தலைவர்களாகவும் சமூகத்தின் வழிகாட்டிகளாகவும் மாற்றம் பெற கல்வியறிவில் வளர்ச்சி பெற வேண்டும். சீரிய சமுதாய கட்டுக்கோப்புக்குள் உள்ளடங்க அவர்கள் முன்வர வேண்டும். எமது பாரம்பரியம் யாவராலும் உணரப்பட வேண்டும். இதற்கு நாம் யாவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் காணப்படும் பிரச்சினைகள், அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக விளங்கும் காரணிகள், தொழிற்கல்வியைத் தொடர்வதில் ஏற்படும் தடங்கல்கள், இனமத ரீதியாக எதிர்நோக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள், பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகள் பற்றி இங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டவிருக்கின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் அடிப்படையில் இளையோர் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அடையாளம் கண்டு தந்திரோபாயமாக அவற்றை நடைமுறைப்படுத்துவதில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று இளைஞர் யுவதிகளிடையே காணப்படும் குழப்ப நிலைகளுக்கும் தவறான பழக்க வழக்கங்களுக்கும் மூல காரணமாக அமையக்கூடிய விடயங்கள் எம்மால் ஆராயப்பட வேண்டும். ஆனால் இவற்றை ஒரு நிறுவனமோ எம்மைப் போன்ற முதியவர்களோ ஆராய்வதை விட இளைஞர்களுக்கான தேவைகளையும் அவர்களின் பிரச்சினைகளையும் இளைஞர் யுவதிகள் ஊடாகவே அறிந்து கொண்டு அவர்கள் மூலமாகவே அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வது உசிதம் எனக் கருதுகின்றேன்.

யுத்த சூழ்நிலையில்கூட மிக ஒழுக்கமாகத் தமது கல்வி நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்திய இளைஞர்களும் யுவதிகளும் யுத்த சூழ்நிலைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அமைதிநிலை உருவாக்கப்பட்ட பின்னர் ஒழுக்கக்குறைவு உள்ளவர்களாக வெறும் வீதிச்சண்டை, வாள்வெட்டு, மதுபோதை, போதைவஸ்துப் பாவனை என சமூக நலன்களுக்கு ஒவ்வாத பழக்கவழக்கங்களில் ஈடுபட்டுத் தம்மையும் அழித்துக் கொண்டு அவர்களது பெற்றோர்களுக்கும் துன்ப துயரங்களை கொடுத்து ஏதுமறியா அப்பாவிகளையுந் துயரத்தில் ஆழ்த்தி சமூகச் சீரழிவை உண்டு பண்ணி வருவது வேதனைக்குரியது.

இவற்றின் பின்புலத்தில் ஏதாவது அரசியற் காரணங்கள் உட்புகுந்திருக்கக்கூடும். அவற்றை இனங்காண வேண்டியது இளைஞர் யுவதிகளின் பொறுப்பே. இவற்றையெல்லாம் பகுத்தறிந்து கொண்டு தமது பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்ள இளைஞர் யுவதிகள் முன்வரவேண்டும். அதை விட்டு அவர்கள் பிரச்சினையாளர்களாக மாறுவதை எந்த வகையிலும் எமது இளைஞர் யுவதிகள் நியாயப் படுத்த முடியாது.

இந்த நாட்டின் முதுகெலும்பென வர்ணிக்கக்கூடிய இளைஞர், யுவதிகள் எதிர்காலத் தலைவர்களாகப் பரிணமிக்கப் போகும் இளைஞர் யுவதிகள், தமது கடமைகளை மறந்து மாயைத் தோற்றங்களில் தமது சிந்தனைகளை உட்புகுத்தி தம்மை அழித்து கொள்கின்ற செயல்களிலிருந்து விடுபட முன்வர வேண்டும். அதற்கு இளைஞர் யுவதிகளுக்குச் சரியான வழிகாட்டல்கள் கிடைக்கப் பெறல் வேண்டும்.

இன்றைய இளைஞர் யுவதிகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதோ ஒரு இலக்கை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றார்கள். அந்தப் பரீட்சைகளில் தற்செயலாக எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற முடியாது தவறுகின்ற பட்சத்தில் அவர்கள் தமது தன்னம்பிக்கையை இழந்து விடுகின்றார்கள். தொடர்ந்து என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை இல்லாது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பாரமாக மாறுகின்றார்கள். இந்நிலையில் மாற்றுத்திட்டங்கள் அல்லது வழி முறைகள் பற்றிய சிந்தனைத் தெளிவுகளை ஏற்படுத்தவும் அவர்களுக்கு வழிகாட்டி தொழில் முறைக் கல்விகள் மற்றும் இன்னோரன்ன கல்வித் திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தவும் அக் கற்கை நெறிகளில் சிறப்பான பெறுபேறுகளை பெற்று சமூகத்தில் நல்ல அந்தஸ்த்தில் இருக்கக்கூடியவர்களாக மாறுவதற்கும் அவர்களுக்கு சரியான வழிகாட்டிகள் அவசியமாகின்றன.

எதிர்காலம் பற்றிய ஒரு மலைப்பு இளைஞர் யுவதிகள் மட்டத்தில் ஏற்படும் போது அவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டி நல்லதொரு பாதை அமைத்துக் கொடுக்க வெற்றி கண்ட இளைஞர் யுவதிகளும் தாமே முன்வரலாம். இன்றைய காலகட்டத்தில் இளைஞர் யுவதிகள் தங்களை மற்றவர்கள் ‘திருத்துவதை’ அடியோடு வெறுக்கின்றார்கள். ஆகவே, இளைஞர் யுவதிகள் முன்னேற்றத்தில் சிரத்தையுடையோர் அவர்களின் மனோநிலையை முதலில் புரிந்து கொள்ள முன்வர வேண்டும். அவர்களின் உணர்வுகளை அவர்கள் மனோ நிலையில் இருந்து புரிந்துகொள்ள முன்வர வேண்டும். அதன்பின் அவர்களுக்கு ஏற்ற வகையில் பயன் தரும் நடவடிக்கைகளில் அவர்கள் இறங்க நாங்கள் உதவி புரிய வேண்டும்.

இளைஞர் யுவதிகளின் ‘தவறுகளை’ நாங்கள் பெரிதுபடுத்தி அவர்களை ‘திருத்த’ சமுதாயம் முன் வராமல் இளைஞர் யுவதிகளின் பலத்தை அவர்களின் நற்சிறப்புக்களை வெளிக் கொண்டுவர நாம் பாடுபட வேண்டும் என்கின்றது தன்னுறுதியுடைய இளைஞர் மேம்பாட்டு வளர்ச்சி பற்றிய அண்மைய சிந்தனைகள். இதன் அடிப்படையில் ஒவ்வொரு குழந்தையிடமும் ஒவ்வொரு இளைஞர் யுவதியிடமும் தனித்துவமான சில ஆற்றல்கள் வலிமைகள் உண்டு. அவற்றை வெளிக் கொண்டுவர நாம் முயல வேண்டும். எம்முடைய இளைஞர் யுவதிகள் உலகின் மற்றைய பாகங்களில் வசிக்கும் இளைஞர் யுவதிகளில் இருந்து வேறுபட்டவர்கள் அன்று. உலக ரீதியாக இளைஞர் யுவதிகளை பலம் மிக்க சமூகமாக மாற்ற மற்றைய நாடுகளில் எது எதனைச் செய்கின்றார்களோ அவற்றை எமக்கேற்ற மாற்றங்களுடன் மாற்றி உபயோகிக்க நாம் முன்வர வேண்டும்.

முன்னைய காலங்களில் ஆசிரியர்கள் மாணவர்களின் சரியான வழிகாட்டிகளாக திகழ்ந்தார்கள். தம்மிடம் கல்வி கற்ற மாணவர்கள் நல்ல ஒரு நிலையை அடையும் வரை தொடர்ச்சியாக அவர்களின் வழிகாட்டல்கள், மாணவர்கள் பாடசாலையை விட்டு அகன்ற பின்பும் தொடர்ந்து இருந்து வந்தன. ஆனால் இன்று அவ்வாறான நிலைமைகளைக் காண்பது அரிது. எனினும் எமது இளைஞர் யுவதிகள் முறையான வழிகாட்டல்கள் இன்றி திசைமாறிச் செல்வதை அனுமதிக்க முடியாது. அவ்வாறான சிறந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு விழுது அமைப்பு முனைப்புடன் முன்வந்திருப்பது இத்தருணத்தில் பாராட்டிற்குரியது.

இவையாவும் உங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் நீங்கள் பரிசீலனை செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். உங்கள் கருத்துப் பரிமாற்றங்கள் எமது இளைஞர் யுவதிகளின் வருங்கால வாழ்க்கைக்கு அனுகூலமாக அமைவன என்ற திடமான நம்பிக்கையுடன் உங்கள் நடவடிக்கைகள் யாவும் சிறக்க வாழ்த்தி என்னை அழைத்தமைக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

*மாநாட்டின் கௌரவ அதிதியும் விழுதின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சட்டத்தரணி மைத்ரேயி இராஜசிங்கம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறியதுடன் விழுதின் செயற்பாடுகளின் வெளிப்பாடு இன்றைய தினத்தில் அனைவரையும் உணரவைத்துள்ளதெனவும், கடந்த பதினைந்து வருடகாலச் செயற்பாட்டின் விழுதுகளாகத் தேர்தலில் போட்டியிட்ட பெண்கள் விருதுகளினைப் பெறுவது மகிழ்ச்சியினை அளிக்கின்றது என்றார். எமது செயற்பாடுகளுக்கு மேலும் வலுப்படுத்தியதாகக் கொண்டுவரப்பட்ட பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீடு உங்கள் அனைவருக்கும் சாதகமாய் அமைந்துவிட்டது. இதனை நாம் எதிர்வரும் காலங்களிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்னும் நம் நாட்டில் தேசிய வலையமைப்பாக அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களாகிய நீங்கள்தான் அடையாளப் படுத்தப்படுகின்றீர்கள். உங்களால்தான் தேசிய விதவைகள் பட்டயம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதிலுள்ள விடயங்கள் குடும்பத் தலைமை தாங்கும் பெண்களுக்கான கொள்கையினுள் உள்வாங்கப்பட்டுள்ளது என்பது பெருமைப்படக் கூடிய விடயம் எனவும் குறிப்பிட்டார்.*

*அடுத்து, அரசியற் கற்கைநெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் பிரதம அதிதியினாலும் இதர விருந்தினராலும் வழங்கி வைக்கப்பட்டன. பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், புத்தளம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் பெண்களுக்கான அமரர் சாந்தி சச்சிதானந்தம் ஞாபகார்த்த விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. விழுதின் அலுவலர் கோமதியின் நன்றியுரையுடன் தேசிய மாநாடு நிறைவுக்கு வந்தது.*











# தலைவியர் வரிசையில்....

**இம்முறை தலைவி இதழின் தலைவியர் வரிசைப் பகுதியினை அலங்கரிக்கின்றார் மன்னார் மாவட்ட பெண்கள் சமாசத்தின் முன்னாள் தலைவியும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பிரதிநிதியாகவும் கடமையாற்றும் திருமதி மல்லிகா அமிர்தநாதன் அவர்கள்**

மன்னார் மாவட்டப் பெண்கள் சமாசத்தின் முன்னாள் தலைவி, சிவில் சமூக அமைப்பின் அடம்பன் பிரதேச சிறுவர் பிரிவுக்கான தலைவி, பிரதேச சபைஉறுப்பினர், சிறுவர் இல்லப் பொறுப்பாளர் எனப் பன்முகப்பட்ட ஆளுமையுடன் முழுமையாகத் தன்னை சமூகசேவைகளில் ஈடுபடுத்தியிருக்கும் சிநேகபூர்வமான பண்பு கொண்டதோர் பெண்மணியாக அடையாளப்படுத்தப்படுபவர்தான் மல்லிகா. மருதநகர் கிளிநொச்சியில் பிறந்து, தற்போது மன்னாரிலும் தன் சேவைகளினைத் தொடர்ந்து வருகின்றார். மாரிமுத்து - அமிர்தம் தம்பதியினரின் கடைசி மகளான இவர் பிறந்து பத்து மாதங்களிலேயே தன் தந்தையின் அரவணைப்பினை இழந்துவிட்டார். தாய் மற்றும் சிறியதாயாரின் குடும்பத்தினரின் அரவணைப்பிலே சிறுவயது முதலே வளர்ந்து வந்த இவர் தன் உயர்தரக்கல்வியின் பின்னர் 1986 இலே கிளிநொச்சி, தர்மபுரம் அன்னை கஸ்தூரிபாய் சிறுவர் இல்ல பொறுப்பாளராகக்கடமையாற்றியதுடன்காந்திசேவாஇல்லப் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார். 1992 இலேதிருமணம்முடித்து,1996இல் இடம்பெற்ற இடம்பெயர்வுடன் மன்னாரில் குடியேறினார்.

ஐம்பது வயதுடைய இவர் நான்கு பிள்ளைகளின் தாயாகவும் சிறந்த குடும்பத் தலைவியாகவும் மட்டுமல்லாது தாம் வாழும் சமூகத்தின் தேவைகளிலும் பொறுப்புகளிலும் அக்கறை கொண்டதோர் சமூகத் தலைவியாகவும் தன்னை வெளிக்காட்டி வருகின்றார். 2010 இல் சாளம்பன் கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்து, தமது சமூகப்பணியினை மன்னாரில் ஆரம்பித்த இவர் விழுதுடன் தன்னுடைய சங்கத்தினையும் இணைத்துச் செயற்பட்டு படிப்படியாக மாவட்டப் பெண்கள் சமாசத்தின் தலைவியாகவும் தெரிவு செய்யப்பட்டார். யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களைக் கொண்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் சமாசத்துடன் இணைக்கும் பணியில் ஈடுபட்டு வருவதோடு, ஒவ்வொரு மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களிலும் உள்ள பெண் தலைமை தாங்கும் பெண்களை இணைத்துக் கிராமங்கள் தோறும் அமரா பேரங்களினை உருவாக்குவதிலும் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றார்.

மன்னார் மாவட்டப் பெண்கள் சமாசத்தின் தலைவியாகப் பொறுப்பேற்ற காலத்தில் 33 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களையும், 24 அமரா போரங்களையும் மாதந்தோறும் சென்று சந்தித்து, வாசகர்வட்ட செயற்பாடுகளையும் முன்னெடுத்து வந்தார். தற்போதும் தன்னால் முடிந்தளவு அப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருவதனைக் காணமுடிகின்றது. விழுது நிறுவனத்தினால் வலுவூட்டப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயற்படுகின்ற சமாசங்களுள் மன்னார் மாவட்டப் பெண்கள் சமாசமும் ஒன்றாகும். இச் சமாசமானது 2015 இல் பெப்ரவரி மாதம் 02ஆந் திகதி விழுது நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி இந்துமதியின் தலைமையில் 23 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுடனானகூட்டமொன்று இடம்பெற்றபோது தாமதமின்றி அனைவராலும் மாவட்டப்பெண்கள் சமாசம் உருவாக்கப்பட்டு, மாவட்ட சமாச நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டது. அன்று முதல் இச்சமாசமானது ஏனைய மாவட்டப் பெண்கள் சமாசத்தினைவிட மிக்கவினைத்திறனுடன்செயற்பட்டு, ஏனைய மாவட்ட சமாசங்களுக்கு முன்னோடியாகவும் இயங்கி வருகின்றது.

அத்துடன் சர்வதேச மகளிர் தினம், சர்வதேச அன்னையர் தினம், சர்வதேச விதவைகள் தினம், சர்வதேச மனித உரிமைகள் தினம், உண்மைக்கும் உரிமைக்குமான தினம், காணாமலாக்கப்பட்டோருக்கான தினம் என அவசியமான அனைத்து விசேட தினங்களையும் முன்னுரிமைப்படுத்தி, அவற்றினை அனுஷ்டிப்பதுடன் மக்களை விழிப்படையச் செய்து வலுவூட்டும் நடவடிக்கையாகவும் இதனை முன்னெடுத்து வருகின்றார். 2015 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக ஒரு பெண் தெரிவு செய்யப்பட வேண்டுமென்பதில் முழுமூச்சாக நின்று செயற்பட்டவர். தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரான திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா பதவியேற்பதற்கு அனைத்து மாவட்டப்பெண்கள்சமாசங்களுடனும்தொடர்பு கொண்டு, பல்லாயிரக்கணக்கான கையொப்பங்களினைப் பெற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடத்துக்கு அனுப்பி, அவரின் தெரிவினை உறுதிப்படுத்தியவர்.



**திருமதி மல்லிகா அமிர்தநாதன்**

அரசியல் யாப்பு உருவாக்கம் மற்றும் நிலைமாறுகாலநீதி தொடர்பான பல மாவட்ட மற்றும் தேசியமட்டக் கலந்துரையாடல்களில் தனது குரலினைப் பதிவு செய்தவர். 28.10.2015 அன்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து, வட-கிழக்கில் கிழக்கில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிலைமாறுகாலநீதிப் பொறிமுறையின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்கள் செயல்வடிவத்துக்குட்படுத்தப்பட வேண்டும், அதற்கு அரசு உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் ஆணித்தரமாகத் தன் கருத்துக்களினை முன்வைத்தார். அதுமட்டுமன்றி நிலைமாறுகாலநீதி தொடர்பான ஆலோசனையினை மாவட்ட நல்லிணக்கச் செயலணிக்கு மாவட்டப் பெண்கள் சமாசம் சார்ந்து கருத்துக்களைத் தான் வைத்ததுடன் ஏனையோரையும் கருத்துக் கூறச் செய்தார்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்துடன் மட்டுமன்றி ஏனைய பல அமைப்புக்களுடன் இணைந்தும்பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வழிகாட்டல்களினை இன மத பேதமின்றி வழங்கி வருகின்றார். பெண்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு பன்னவேலை, மாடுவளர்ப்பு வாழ்வாதாரச்செயற்பாடுகளுக்காக இலங்கை தேசிய சேமிப்பு வங்கி மூலம் சுமார் 20 அமராபோரஅங்கத்தவர்களுக்கானகடனுதவியைப் பெற்று, அவர்கள் தமது வாழ்வாதாரச் செயற்பாடுகளினை முன்னெடுக்க உதவியுள்ளார்.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாகவும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். மன்னார் மாவட்டத்திலுள்ள மகளிர் அமைப்புக்களுடனும் வலையமைப்புக்களுடனும் இணைந்து, புங்குடுதீவு மாணவியான வித்யாவின் படுகொலையைக் கண்டித்து, மௌன ஊர்வலத்தினை ஒழுங்குபடுத்திநடாத்தஉதவினார். அதுமட்டுமல்லாது, சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை நேரில் சென்று ஆராய்ந்து, உரிய நபர்களுடன் கதைத்து, அதற்கான தீர்வுகளையும் சமாசத் தலைவி என்ற வகையில் முன்னெடுத்து வருகின்றார். அடம்பன்பொலிஸ்பிரிவின்சிறுவர்பாதுகாப்புக் குழுவின் தலைவராகவும், சாளம்பன் மகளிர் விவகார சங்கத்தின் செயலாளராகவும், மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழு உறுப்பினராகவும், இளந்தளிர் பெண்கள் அமைப்பின் செயலாளராகவும் தன் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்து, செயற்படும் இவரது ஆளுமை சிறப்புக்குரியது.

விழுதினால் கபே நிறுவனத்தின் உதவியுடன் பயிற்சிபெற்ற இவர் பாராளுமன்ற தேர்தலின் போது தேர்தல் கண்காணிப்புக் கடமைகளையும் ஆற்றியவர். மாவட்டப் பெண்கள் சமாசத்தின் அங்கத்தவர்களைக் கொண்டு கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்கக் குழுவின் செயற்திட்டவரைபுக்கமையஉபகுழுக்களினைஅமைத்து, ஒவ்வோர் பிரச்சினைகளுக்குமான செயற்பாடுகளை வரையறுத்து செயற்பட வழிகாட்டி வருகின்றார். குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விபரம், காவல் பணிமனையில் மொழிப் பிரச்சினையைத் தீர்த்தல், பெண்களை விசாரணை செய்வதற்காகப் பெண் காவல் அதிகாரியை நியமித்தல் போன்ற முன்னேற்பாடான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றார். மதுப்பாவனையால் பாதிக்கப்பட்ட தம் பிரதேசத்தில், போத்தல் கள்ளைத் தடைசெய்யக் கோரி, ஜனாதிபதி, பிரதமர், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் மற்றும் பொலிஸ் ஆகியோருக்கு மகஜரினைக் கையளித்து அதில் வெற்றியையும் கண்டுள்ளார்.

இவ்வாறு விழுதினூடாகவும் மற்றும் பல அமைப்புக்களினூடாகவும் பல பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதன் விளைவாகத் தேர்தல் களத்தில் இறங்கித் தனது பணிகளை தொடரவேண்டும் என்ற ஆர்வத்தினை அவர் வெளிப்படுத்திய தன் விளைவால் விழுது அரசியலில் பெண்கள் பங்கேற்பது தொடர்பான பயிற்சிகளினை அவருக்கு வழங்கியது. அவரைத் தேர்தலில் போட்டியிட அனைத்துவிதமான ஒத்துழைப்புக்களையும் வழங்கியது. அதனூடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு உதவவேண்டும்என்பதனைத்தன்இலக்காகக்கொண்டுசெயற்பட அவருக்குரிய தளம் பிரதேச சபைக்கு ஊடாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் மாந்தை மேற்குப் பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு, தன் கடமைகளை வழங்கி வருகின்றார். அவர் கூறும் போது, 'பல நிறுவனங்களால் நான் வலுவூட்டப்பட்டபோதும், மக்களுக்கான பணியில் முழுமையாக நான் ஈடுபடவேண்டும் என்ற அதிகபட்ச ஆர்வம் விழுதுடன் இணைந்து பணியாற்றிய பின்னரே எனக்குள் ஏற்பட்டது. அத்தகைய ஆர்வத்துடன் விழுதினால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளிலும் தவறாது என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். எனது முன்னேற்றங்கள் அனைத்திற்கும் காரணமான விழுது நிறுவனத்திற்கு நான் எப்போதும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்' என்று அவர் குறிப்பிடுவது மக்கள் பணிக்காய் தன்னை அர்ப்பணித்திருப்பதனை எமக்குப் புலப்படுத்துகின்றது. அவரது பணிகள் தொடர்ந்தும் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள் கூறுகின்றாள் தலைவி.

**✽ ஹிலாரி ஜெபநாதன் டலிமா மற்றும் மரிஸ்ரெலா**
மாந்தை மேற்கு, மன்னார்

## கிளிநொச்சி மாவட்ட அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்களின் செயற்பாடுகளிற் சில...

கிளிநொச்சி மாவட்டத்தில் விழுதின் திட்டக் கிராமங்களினுள் இனங்காணப்பட்ட பெண்தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தமது சொந்தக்காலில் நிற்குமளவிற்குப் பொருளாதார சுயசார்பு உள்ளவர்களாகவும், தாம் எதிர்நோக்கும் அரசியல் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடிய வலுவுள்ளவர்களாகவும் மாற்றியமைக்கும் நோக்கோடு இருநூறுக்கும் மேற்பட்ட பெண்களுடன் உருவாக்கப்பட்டதே கிளிநொச்சி மாவட்ட அமரா ஒன்றியமாகும்.இவர்கள் பெற்ற பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு மூலமாக தங்களது பிரச்சினைகளை இனங்கண்டு, உரிய சேவைவழங்குனர்களை நாடி, அவர்களிடம் தீர்வுகளைப் பெறுவதில் ஈடுபடுகின்றனர்.

தங்களது பாதுகாப்பு, வாழ்வாதாரம், பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், சலுகைகளும், திட்டங்களும், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விடயங்கள் பற்றி கேள்வியெழுப்புபவர்களாகவும், கவனயீர்ப்புப் போராட்டங்களில் பங்குபற்றுபவர்களாகவும் இவர்கள் உள்ளனர். இதுவரை காலமும் நிறைவேற்றப்படாத அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு தகவல் அறியும் சட்டத்தினைப் பயன்படுத்தி பிரதேச செயலகங்களுக்குத் தமது தேவைகளை உள்ளடக்கிய விபரங்களினைக் கோரி விண்ணப்பங்களினை அனுப்பிவைத்து, அது தொடர்பான பதில்களையும் பெற்றுள்ளனர்.

இலகுபடுத்துனருக்கான பயிற்சி, தலைமைத்துவம், பெண்களும் அரசியலும், பால்நிலை, பரிந்துரை, ஊடகப் பரிந்துரை, அரசியலமைப்பு உருவாக்கம், நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதி, புதிய தேர்தல் முறைமை, சீடோ, பிரதேச சபைகளின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என பலதரப்பட்ட பயிற்சிகளினை இவர்கள் பெற்றுள்ளனர். வாசகர் வட்டச் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். இவர்களில் இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சுரேஸ்குமார் உசாந்தனி, சிவசோதலிங்கம் பற்றிமா மற்றும் மோகன் மேரி ஜசிந்தா ஆகிய மூவரும் கிளிநொச்சி மாவட்ட அமரா ஒன்றியத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டு போட்டியிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.









# அரசியற் கற்கைநெறி பயிலுனர்களுக்கான அமர்வுகள் கண்டியில்...












விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் நடாத்தப்பட்ட 'அரசியல், ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தில் இளையோரை வலுப்படுத்தல்' என்ற அரசியற் கற்கைநெறியின் 'சர்வதேச அரசியலும், இலங்கையின் அரசியல் உறவுகளும்' பற்றிய அமர்வு கண்டியில் இடம்பெற்றது. இதில் கற்கைநெறியினைப் பயிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் பயிலுனர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்த அமர்வினை பேராதனைப்பல்கலைக்கழகத்தின்அரசியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் Dr. எஸ். பாஸ்கரன் அவர்கள் நடாத்தியிருந்தார்கள்.

சீனாவில் லயோனிங் பல்கலைக்கழகத்தில்தனதுகலாநிதிப்பட்டத்தினைப் பூர்த்திசெய்த பாஸ்கரனின் அமர்வுகளில் இலங்கை மற்றும் இந்திய உறவுகள் இலங்கையில் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றன, அவை எதிர்காலத்தில் எத்தகைய நிலைமையினைக் கொண்டுவரலாம், வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான புதிய எண்ணக்கருக்கள் மற்றும் அனுபவங்கள் பயிலுனர்களுக்கானசிறந்த விடயதானங்களைக் கற்பித்திருந்தன.

தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழக அரசியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் Dr. ஆர். ரமேஷ் அவர்களும் குறித்த அரசியற் கற்கைநெறியின் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தலில் வெளிநாட்டு உறவுகள் பற்றிய விடயங்கள் அமையுமிடத்து அவை இன, மத பேதமின்றி அனைவராலும் பயன்படுத்தக் கூடியதாகவும், தெளிவினை வழங்குவதாகவும் அமையும். எனவே, உங்களது ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கும் பயிலுனர்களுக்கு இந்த அமர்வு பயனுள்ளதாக அமையுமெனவும், தொடர்ந்தும் ஏனைய அமர்வுகளினை இதர விரிவுரையாளர்களின் ஆதரவுடன் தொடர தான் ஏற்பாடுகளினை மிக விரைவில் செய்வதாக உறுதியளித்து அமர்வினை நிறைவுக்குள்ளாக்கினார். தொடர்ந்து பயிலுனர்கள் பேராதனை பல்கலைக்கழகத்துக்கும் சென்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விழுதின் வெளியீடுகள் வரிசையில்...

### செங்கோலோச்ச விழைந்த பெண்களின் குரல்கள்




விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் 15 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு, பெண்கள் தீர்மானமெடுக்கும் துறைகளில் பங்கேற்பதற்காக கடந்த பதினைந்து வருட காலமாய் வழிகாட்டியதில் விழுதின் வகிபாகத்தை மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்காக 'செங்கோலோச்ச விழைந்த பெண்களின் குரல்கள்' என்ற நூலை வெளியிட்டுள்ளோம். இதில் பெண்களின் அரசியல்பிரதிநிதித்துவம்,அதனைப்பெறுவதற்காக எதிர்கொண்ட சவால்கள் மற்றும் விழுதின் காத்திரமான முன்னெடுப்புக்கள் பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இந்த நூலை பெறவிரும்பினால் விழுது தலைமை அலுவலகத்தினை அல்லது கிளைக் காரியாலயங்களை நேரடியாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

## வாசகர் கடிதங்கள்

‘யார் அனாதைகள்?’ என்ற கவிதை முற்றுமுழுதாக ஆண்களை மாத்திரம் விமர்சிப்பதாக உள்ளது. இவ்வாறான தவறுகளைப் பெண்களும் செய்கின்றார்கள். அவர்களின் தவறுகளும் சுட்டிக்காட்டப்பட வேண்டும் இவ்வாறான கவிதைகளின் ஊடாகப் பெண்களின் தவறுகளையும் எடுத்துரைப்பது வரவேற்கத்தக்கது.

‘நாடக போதையில் மூழ்கிய பெண்ணினால்
சிதைந்தது குடும்பம்’
விபத்தில் காலை இழந்த கணவனை
கைவிட்ட மனைவி மறுமணம்
‘வெளிநாட்டில் வெளியில் காய்ந்து
கணவன் உழைத்த பணம் கரைந்து போனது
மனைவியின் முகத்தில் வடியும் முகப்பூச்சாய்’

மேலே குறிப்பிட்ட வரிகளைப்போன்று ஓரிரண்டு வரிகளில் பெண்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தால் இக்கவிதை மிகவும் நன்றாக இருக்கும்.

**- ஏ. நிதுர்சன்**
**மூதூர், திருகோணமலை**

தலைவி எனும் பத்திரிகையின் ஊடாக வெளியிடப்பட்டு வருகின்ற அத்தனை அம்சங்களும் வரவேற்கத்தக்கன அத்துடன் அவை தற்காலத்திற்கு பொருத்தமானவையாகவும் காணப்படுகின்றன. அந்தவகையில் தலைவி பத்திரிகையின் பெண்தலைமைதாங்கும் குடும்பங்களின் வலுப்படுத்தல்கள் தொடர்பாக வெளிவரும் விடயங்கள், தகவல்கள் என்னை ஈர்க்கக்கூடிய வகையில் அமைந்திருந்துள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெண்தலைமைதாங்கும் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்தினைக் கவனத்தில் கொண்டு விழுது செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினை நிவர்த்திசெய்கின்ற வகையில் பல்வேறுபட்ட திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையும் வரவேற்கத்தக்கதாகும்.

சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவோர் இளைஞர்கள் என்ற வகையில் இளைஞர்களுக்கும் பயன்தரத்தக்க விடயங்களை சிறந்த உத்திமுறைகளைக் கையாண்டு பல பணிகளையும் முன்னெடுத்து வருகின்றது. அதுமட்டுமன்றி இளைஞர்கள் மத்தியில் மாற்றங்களை கொண்டுவருகின்ற பட்சத்தில் இலகுவான முறையில் சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி சமூக மாற்றங்களையும் ஏற்படுத்த முடியும் என்பதனை உணர்ந்து கொண்டு அதற்கேற்ப திட்டங்களினை வகுத்துச் செயற்படுகின்ற விழுதின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கன.

**- பீ. திசாந்தினி**
**கன்னங்குடா, மட்டக்களப்பு**

பெண்களால் முடியாதது என்று எதுவும் இல்லை. ஆண்களை எல்லா விடயத்திற்கும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்காமல் விவசாயத்தில் பெண்களும் தலைமை தாங்க வேண்டும். இதனை ஊக்குவிப்பதன் மூலம் வீடு, பிரதேசம் மற்றும் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் பெண்களின் தன்னம்பிக்கை அதிகரிப்பதோடு உற்பத்தியும் அதிகரிக்கும். அதற்காக வேறுபாடில்லாமல் சமத்துவ பயிற்சியும் ஊக்குவிப்பும் வழங்கப்பட்டால் நாடு விரைவில் அபிவிருத்தி அடையும்.

பெண்கள் விவசாயத்தில் இருந்து வளர்ச்சி பெற்று அரசியல் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வளர்ச்சி பெறுவார்கள். வீடுகளில் காணப்படக்கூடிய மிகுதியான நிலங்களை இவ்விவசாயச் செய்கைக்காக பயன்படுத்தி அதனூடாக மேலும் பல பயன்களை அடையமுடியும். இதற்காக மேலதிக நிலம் வேண்டும் என எதிர்பார்க்கத் தேவையில்லை. எம்மிடம் இருக்கும் வளத்திற்கு ஏற்ப இதனைச் சராசரிப் பெண்களும் தமது வீடுகளில் முன்னெடுப்பதன் ஊடாகத் தமது வீடுகளில் உணவுத் தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்கான மரக்கறிகள், பழங்கள் மற்றும் கீரைவகைகளை இலகுவாகவும் தரமானதாகவும் புதிதாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. வீண்விரயங்கள் மற்றும் கழிவு முகாமைத்துவமும் வீடுகளில் எளிய முறையில் மேற்கொள்ளமுடிவதோடு நாளாந்த தேவைக்கான பழங்கள் மற்றும் மரக்கறிகளை வாங்குவதற்காகச் செலவு செய்கின்ற பணத்தினையும் நாம் சேமித்துக்கொள்ள முடிகிறது.

இதற்காக நிறுவனங்கள் ஊடாக உதவிகள் வழங்கப்படவேண்டும் என்ற அவசியமும் எமக்குத் தேவையில்லை. எம்மிடம் இருக்கும் அடிப்படை அறிவினைக்கொண்டே நாம் இதனை மேற்கொள்ள முடியும். இது குறித்து நாம் அனைவரும் சிந்திக்கவேண்டும். அவ்வாறு சிந்திப்போமானால் எமது நாட்டில் அழிந்துவருகின்ற விவசாயத்துறையின் எழுச்சிக்கு அனைவராலும் பங்களிப்பு வழங்கமுடியும். அத்துடன் பெண்கள் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளுதலானது அவர்களுக்கு சிறந்த பொழுதுபோக்காக அமைவதோடு பெண்கள் பொருளாதார ரீதியிலும் முன்னேறிச் செல்லவும் வழவகுக்கின்றது.

**கே.சுவேந்திரகுமார் (கிழக்கு பல்கலைக்கழகம்)**
**சுங்கான்கேணி, வாழைச்சேனை**

# மறப்பதற்கில்லை சாந்தி!



பெண்ணினத்தின் பெருமையினைப்
பேசவந்த பெருந்தகையே
கண்மணியாய் திகழ்ந்த எம்மை
களமாக்கி வைத்தனையே!

சொல்லாற்றல் மிக்கவளே – செயல்களில்
சோர்விலா நங்கையே
பெண்ணடிமை செயல்களுக்காய்
பெருவருத்தம் கொண்டவளே!

மெய்வருத்தம் பாரா வெண்மதியே!
உன் வருத்தம் நிச்சயம் தொலையுமடி
பைத்தியமாயிருக்கின்றோம்
பாதுகாப்பைத் தேடுகின்றோம்

இத்தனைக்கும் எம்மவரை ஆளாக்கி
வித்திட்ட விண்ணவளே
எத்திசையும் சாந்தி மயமாகுமடி
உண்மை அது உரைக்கின்றேன்

**- திருமதி விஜயலஷ்மி இராமச்சந்திரன்**
அமரா போரத்தலைவி, களுவாஞ்சிக்குடி வடக்கு, மட்டக்களப்பு

## விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்திடமிருந்து...

அன்புத் தோழியரே! உங்களது சங்கங்களினது முன்னோடியான செயற்பாடுகள் தொடர்பான விடயங்களினை எமக்குச் சான்றுகளுடன் அனுப்பி வையுங்கள். அவற்றின் நம்பகத்தன்மைக்கு நீங்களே பொறுப்பாளிகள்.

உங்களது ஆக்கங்களினை நீங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விழுதின் கிளைகளிலேயும் கையளிக்கலாம். அங்கிருந்து தலைவி செய்திமடலினை இலவசமாகவும் பெற்றுக் கொள்ளலாம். ஆக்கங்கள் பற்றிய உங்கள் சுதந்திரமான, காத்திரமான கருத்துக்களினை நாம் வரவேற்கின்றோம். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் உங்கள் ஆக்கங்களை உறுதிப்படுத்தல்களுடன் அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

*உங்கள் ஆக்கங்கள், கருத்துக்கள் வந்தடைய வேண்டிய முகவரி:*

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்**
191, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04
+94 11 250 62 72 | +94 11 258 51 90
info@viluthu.org | www.viluthu.org